**பதுளை- செங்கல்லடி வீதி முன்னேற்றச் செயற்திட்டம் - 2015**

பதுளை- செங்கல்லடி வீதி முன்னேற்ற செயற்திட்டத்தின் 2015 திசெம்பர் 31 இல் முடிவடைந்த முதலாவது கணக்கீட்டு ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் மீதான கணக்காய்வு இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கமைய எனது பணிப்பின் கீழ் மேற்கொள்ளப்பட்டது. இச் செயற்திட்டமானது இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசிற்கும் சர்வதேச அபிவிருத்திக்கான ஒபெக் நிதியம் (ஓஎவ்ஐடி) மற்றும் அபிவிருத்திக்கான சவுதி நிதியம் (எஸ்எவ்டி) என்பவற்றிற்கு இடையில் கைச்சாத்திடப்பட்ட 2015 யூன் 26 மற்றும் 2015 ஒக்தோபர் 30 ஆந் திகதிய 1661 பி மற்றும் 10/639 ஆம் இலக்க கடன் உடன்படிக்கையின் கீழ் அமுலாக்கப்படுகின்றது.

## 1.2 செயற்திட்டத்தின் அமுலாக்கம், நோக்கங்கள், நிதியளிப்பு மற்றும் காலப்பகுதி

செயற்திட்டத்தின் கடன் உடன்படிக்கைகளின் பிரகாரம், உயர் கல்வி மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சு நிறைவேற்று முகவராக உள்ளதுடன் வீதி அபிவிருத்தி அதிகாரசபை செயற்திட்டத்தின் அமுலாக்கல் முகவராக உள்ளது. பிராந்தியங்களில் போக்குவரத்தினை முன்னேற்றுவதற்கும் பொருளாதார நடவடிக்கைகளை உயர்த்துவதற்குமாக மத்திய மற்றும் ஊவா மாகாணங்களுடன் கிழக்கு மாகாணத்தின் இணைப்பினை முன்னேற்றுவது செயற்திட்டத்தின் குறிக்கோளாக உள்ளது. வீதிகளின் 147 கிலோமீற்றர் மொத்த நீளமானது ஒப்பந்த அமுலாக்கல் நோக்கங்களிற்காக பதுளை முதல் விபிலி மற்றும் விபிலி முதல் செங்கல்லடி வரையான பெயர்களுடைய இரண்டு கூறுகளிற்குள் பிரிக்கப்பட்டிருந்தது. கடன் உடன்படிக்கையின் பிரகாரம், செயற்திட்டத்தின் மதிப்பிடப்பட்ட மொத்தக் கிரயம் ரூபா 18,200 மில்லியனிற்கு சமமான யூஎஸ்.டொலர் 140 மில்லியனாக உள்ளதுடன் அதில் ரூபா 7,800 மில்லியனிற்கு சமமான யூஎஸ்.டொலர் 60 மில்லியன் சர்வதேச அபிவிருத்திக்கான ஒபெக் நிதியத்தால் நிதியளிப்பதற்கு உடன்பாடு காணப்பட்டதுடன் ரூபா 7,800 மில்லியனிற்கு சமமான யூஎஸ்.டொலர் 60 மில்லியன் அபிவிருத்திக்கான சவுதி நிதியத்தால் நிதியளிப்பதற்கு உடன்பாடு காணப்பட்டது. செயற்திட்டமானது கூறு ஏ மற்றும் பீ இன் கீழ் அதன் நடவடிக்கைகளை முறையே 2016 ஆகஸ்ட் மற்றும் 2016 செப்தெம்பரில் தொடங்கியிருந்ததுடன் 2019 பெப்ரவரி மற்றும் 2019 மார்ச் அளவில் பூர்தியாக்கப்படுவதற்கு பட்டியல்படுத்தப்பட்டது.

## 1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தின் பொறுப்பு

இந்நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத் துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களில் இருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகளிற்கும் முகாமைத்துவம் பொறுப்பாகும்.

## 1.4 கணக்காய்வாளரின் பொறுப்பு

எனது கணக்காய்வின் அடிப்படையில் இந் நிதிக்கூற்றுக்கள் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். ஒழுக்கநெறி வேண்டுதல்களுடன் நான் இணங்கி நடப்பதனையும் நிதிக்கூற்றுக்கள் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றவையா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதற்கு கணக்காய்வு திட்டமிட்டு மேற்கொள்ளப்படுவதனையும் இந்நியமங்கள் வேண்டுகின்றன. நிதிக்கூற்றுக்களில் உள்ள தொகைகளினையும் வெளிப்படுத்தல்களையும் பற்றிய கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக் கொள்வதற்கான செயற்பாட்டு நடைமுறைகளில் கணக்காய்வு ஈடுபடுகின்றது. மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் மதிப்பீட்டினை உள்ளடக்கும் கணக்காய்வாளரின் தீர்மானம் மீது தெரிவு செய்யப்பட்ட நடைமுறைகள் தங்கியுள்ளது. அந்த ஆபத்தினை மதிப்பீடு செய்கையில் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைக்கும் வகையில் செயற்திட்டத்தின் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயமாக சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளை கணக்காய்வாளர் கருத்திற் கொள்கின்றாரேயன்றி செயற்திட்டத்தின் உள்ளகக்

கட்டுப்பாடுகளின் வினைத்திறன் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல. முகாமைத்துவத்தினால் பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தமான தன்மையினையும் முகாமைத்துவத்தால் மேற்கொண்ட கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மதிப்பாய்வு செய்தல் அத்துடன் நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தலினை மதிப்பாய்வு செய்தல் என்பவற்றினையும் கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது. எனது கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன். பின்வருவனவற்றை மதிப்பிடுவதற்கு அவசியமானவையாகக் காணப்பட்ட அவ்வாறான செவ்வையினையும் அப் பரிசோதனை உள்ளடக்கியுள்ளது.

(அ) செயற்திட்ட முகாமைத்துவத்தின் மீதான திருப்திகரமான கட்டுப்பாட்டையும் செயற்திட்டத்தின் செயற்பாடுகள் தொடர்பான புத்தகங்கள், பதிவேடுகள், முதலியவற்றின் நம்பகத்தன்மையையும் நிச்சயப்படுத்துவதற்கேற்றவாறு உள்ளகக் கட்டுப்பாட்டின் நோக்கில் முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள் போதியளவில் இருந்தனவா என்பதும்,

(ஆ) செயற்திட்டத்தினுடைய நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டுள்ள செலவினங்கள் செயற்திட்டத்தால் பேணப்பட்ட மேம்படுத்தப்பட்ட நிதி அறிக்கைகள் மற்றும் செயன்முன்னேற்ற அறிக்கைகளுடன் திருப்திகரமாக இணங்கியுள்ளதா என்பதும்

(இ) இலங்கை அரசாங்கம் மற்றும் கடனளிக்கும் முகவர்களின் நிதிகளிலிருந்தான செயற்திட்ட செலவினங்கள், நிதிசார் மற்றும் பௌதீக ரீதியில் செயற்திட்டத்தின் முன்னேற்றம், செயற்திட்ட தொழிற்பாடுகளிலிருந்து உருவாகிய சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் கடன் முதலியவற்றிலிருந்து மேற்கொள்ளப்பட்ட சொத்துக்களை இனங்காணல் என்பவற்றைத் தொடர்ந்து செல்லும் அடிப்படையில் காட்டும் வண்ணம் போதிய கணக்கீட்டுப் பதிவேடுகள் பேணப்பட்டிருந்தனவா என்பதும்,

(ஈ) கடனின் கீழ் மேற்கொள்ளப்பட்ட பற்றுதல்கள் கடன் உடன்படிக்கையில் குறித்துரைக்கப்பட்ட அளவீடுகளுக்கிணங்க இருந்தனவா என்பதும்,

(உ) கடனின் கீழ் வழங்கப்பட்ட நிதிகள், பொருட்கள், மற்றும் உபகரணங்கள் என்பன செயற்திட்டத்தின் நோக்கங்களுக்காகவே பயன்படுத்தப்பட்டுள்ளனவா என்பதும்,

(ஊ) செயற்திட்டத்தின் அமுல்படுத்தலுக்காக கடைபிடிக்கப்பட்ட வகைப்படுத்தலுக்கிணங்க செலவினங்கள் சரியாக இனங்காணப்பட்டிருந்தனவா என்பதும், மற்றும்

(எ) நிதிக்கூற்றுக்களானவை இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களின் அடிப்படையில் தயாரிக்கப்பட்டிருந்தனவா என்பதும்

(ஏ) கடன் உடன்படிக்கையில் குறித்துரைக்கப்பட்ட நிதிசார் உடன்பாடுகளுடன் இணங்கியிருந்தனவா என்பதும் ஆகும்.

## 2. நிதிக்கூற்றுக்கள்

### 2.1 அபிப்பிராயம்

இதுவரையான எனது ஆய்வின் மூலம் தென்படுவதும் எனக்குக் கிடைக்கப்பெற்ற சிறந்த தகவல்கள் மற்றும் எனக்கு வழங்கப்பட்ட விளக்கங்களுக்கு அமைய,

(அ) செயற்திட்டமானது 2015 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்காக முறையான கணக்கீட்டுக் பதிவேடுகளை பேணியிருந்ததுடன் நிதிக்கூற்றுக்களானவை இலங்கை பொதுத் துறை கணக்கீட்டு நியமங்களுக்கிணங்க 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறான செயற்திட்டத்தின் நிலவரத்தை உண்மையாகவும் நியாயபூர்வமாகவும் காட்டுகின்றன என்றும்,

(ஆ) ஏற்பாடு செய்யப்பட்ட நிதிகள் அவை ஏற்பாடு செய்யப்பட்ட நோக்கங்களுக்காகவே பயன்படுத்தப்பட்டிருந்தன என்றும், நான் அபிப்பிராயப்படுகின்றேன்.

## 3. நிதி மற்றும் பௌதீக செயலாற்றல்

### 3.1 நிதிகளின் பயன்பாடு

நிதியளிப்பு, மீளாய்வாண்டிற்கான பாதீட்டு ஏற்பாடு, மீளாய்வாண்டின் போது மற்றும் 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதிகளின் பயன்பாடு தொடர்பான சில புள்ளிவிபரங்கள் கீழே காட்டப்பட்டுள்ளன.

| மூலம் | கடன் உடன்படிக்கையில் நிதியளிப்பதற்காக உடன்பட்ட தொகை | | மீளாய்வாண்டிற்கான பாதீட்டு மதிப்பீட்டில் செய்யப்பட்ட ஒடுக்கீடு | 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறு |
|---|---|---|---|---|
| | யூஎஸ். டொலர் மில்லியன் | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் | ரூபா மில்லியன் |
| கடனளிக்கும் முகவர் | | | | |
| -ஓஎவ்ஐடி | 60 | 7,800 | - | - |
| -எஸ்எவ்டி | 60 | 7,800 | - | - |
| இலங்கை அரசாங்கம் | 20 | 2,600 | 424.40 | 424.40 |
| | 140 | 18,200 | 424.40 | 424.40 |

### 3.2 பௌதீக செயலாற்றல்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) பட்டியலிடப்பட்ட காலப் பகுதிக்குள் ஒதுக்கப்பட்ட வளங்களைப் பயன்படுத்தி செயற்திட்ட நோக்கங்களின் எய்தலை உறுதிப்படுத்துவதற்கு செயற்திட்டத்தின் முழுக் காலத்தையும் மேவி மாதாந்த, காலண்டு, அரையாண்டு முதலியவற்றில் நிர்யணிக்கின்ற பொறுப்புக்களுடன் நிதி மற்றும் பௌதீள இலக்குகளை சுட்டிக்காட்டுகின்ற ஒட்டுமொத்த விரிவான செயல்நடவடிக்கை திட்டம் தயாரிக்கப்பட்டிருந்தது.

(ஆ) கிடைக்கப்பெற்ற தகவல்களின் பிரகாரம், செயற்திட்டமானது 2009 இலிருந்து காணிச் சுவீகரிப்பு நடவடிக்கைகளுடன் ஈடுபட்டிருந்தது. ஆகவே, பதுளை, பிவில மற்றும் ரிதிமலிக்க பிரதேச செயலக பிரிவுகளில் தரிசுக் காணிகளின் 13.42 ஹெக்டேயர்கள் உள்ளடங்கலாக 59.28 ஹெக்டேயர்கள் காணிகள் மீளாய்வாண்டின் போது சுவீகரிப்பதற்கு இனங்காணப்பட்டிருந்தது. எவ்வாறாயினும், லுனகல, பதியத்தலாவ, மஹோய மற்றும் ஏறாவூர்பற்று போன்ற பிரதேச செயலக பிரிவுகளிலுள்ள சுவீகரிக்கப்பட வேண்டுமென எதிர்பார்க்கப்பட்ட காணிகளை இனங்காண்பதற்கு 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

### 3.3. சர்ச்சைக்குரிய தன்மையான விடயங்கள்

உள்நாட்டு விசேட அனுமதியளிக்கப்பட்ட வங்கியொன்றிலிருந்து வீதி அபிவிருத்தி அதிகாரசபையால் பெறப்பட்ட ரூபா 2.54 மில்லியன் தொகையான கடன் பெறுகைகள் செயற்திட்ட நடவடிக்கைகளை தொடங்குவதற்கு பயன்படுத்தப்பட்டிருந்தது. எவ்வாறாயினும், கடன் திருப்பிச் செலுத்தலிற்கு செய்யப்பட்ட ஒழுங்குகள் கணக்காய்விற்காக விளக்கமிக்கப்பட்டிருக்கவில்லை.